**செய்தி வெளியீடு எண்: 071** **நாள்: 28.01.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் எட்டு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார்போக்குவரத்து நிறுவனங்கள், பொது மக்களுக்கு சிறப்பான போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 21,928 பேருந்துகள் மற்றும் 1,40,615 போக்குவரத்து பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்கள், மலைப் பகுதிகள் போன்ற தொலைதூர இடங்களுக்கும் நாளொன்றுக்கு ஏறத்தாழ 88.64 லட்சம் கிலோ மீட்டர் தூரம் பேருந்துகளை இயக்குகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள மொத்த வழித் தடங்களில் சுமார் 6,000 வழித் தடங்கள் தமிழ்நாட்டில் பின்தங்கிய மற்றும் மலையோர பகுதிகளில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் பேருந்து சேவையை சிறப்பாக வழங்கி வருகின்றன. இதன் மூலம், நாளொன்றுக்கு 2.02 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர்.

- ✓ 18.11.2011 அன்று ரூ.43.10க்கு விற்ற ஒரு லிட்டர் டீசலின் விலை 2013ஆம் ஆண்டில் நடுவண் அரசின் மொத்த கொள்முதலுக்கும் சில்லரை விலைக்கும் ஒரே விலை நிர்ணயித்தல் என்ற கொள்கை முடிவின் காரணமாக டீசலின் விலை உயர்ந்து 27.1.2018 அன்று ரூ.67.23 ஆக உள்ளது.
- ✓ போக்குவரத்து தொழிலாளர்களின் மாத ஊதியம் 2011ல் ரூ.252.37 கோடியாகும். அதுவே 2017ல் ரூ.492.96 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது தொழிலாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தினால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.996 கோடி கூடுதல் செலவாகும்.

- ✓ 2011ல் சராசரியாக ஒரு போக்குவரத்து ஊழியரின் சம்பளம் 21,000 ரூபாயாக இருந்தது, தற்போது சராசரியாக 44,000 ரூபாயாக உயர்ந்துள்ளது.
- ✓ 2011ஆம் ஆண்டில் புதிய சாதாரண பேருந்துகளின் கொள்முதல் விலை ரூ.15.75 லட்சத்திலிருந்து ரூ.18.77 லட்சமாகவும், அதிநவீன பேருந்தின் விலை ரூ.24.06 லட்சத்திலிருந்து தற்போது 34.28 லட்சமாகவும் உயர்ந்துள்ளது.
- ✓ திமுக ஆட்சிக் காலத்தில் இருந்த மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 21,154. அவற்றில், ஆறு ஆண்டுகளைத் தாண்டி ஓடிய பேருந்துகளின் எண்ணிக்கை 8,474ஆக இருந்தது. தற்போது ஓடிக் கொண்டிருக்கும் மொத்தம் 21,928 பேருந்துகளில் பெரும்பாலான பேருந்துகள் ஆறு ஆண்டுகளைக் கடந்து தகுந்த பராமரிப்புடன் இயக்கப்பட்டு வருகின்றன.
- ✓ **இவை தவிர, ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு கடந்த தி.மு.க ஆட்சி முடிவின்போது 922.24 கோடி ரூபாய் நிலுவையாக இருந்தது. 2017 நவம்பர் மாதம் வரை அது முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளது.**
- ✓ போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற கடன் 2011ஆம் ஆண்டில் ரூ.3,392.15 கோடியாக இருந்தது, தற்போது அதனுடைய வட்டி மற்றும் பின்னர் வாங்கப்பட்ட கடனுடன் சேர்த்து இன்றைய நிலையில் ரூ.11,763.06 கோடியாக உயர்ந்துள்ளது.
- ✓ அடமானம் வைக்கப்பட்ட போக்குவரத்துக் கழக சொத்துக்களின் எண்ணிக்கை திமுக ஆட்சிக் காலத்திலேயே 112–ஆக இருந்தது. தற்போது 127–ஆக உள்ளது.
- ✓ பணியிலுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை 2011ஆம் ஆண்டில் ரூ.1,528.05 கோடியாக இருந்தது, தற்போது ரூ.5,572.89 கோடியாக உயர்ந்துள்ளது.

- ✓ இந்த சூழ்நிலையிலும், தமிழ்நாட்டில் 2011ல் இருந்த மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 21,154–லிருந்து இன்றைக்கு 21,928ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ✓ சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து பணியாளர்களின் சிறந்த செயல்பாடுகளையும் மீறி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், சாலை விபத்துகள் நடைபெறுகின்றன. ரூ.706.27 கோடி விபத்து இழப்பீட்டினை சரியான நேரத்தில் வழங்க முடியாததால், 23.7.2017 அன்றுள்ளவாறு, 652 அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் நீதிமன்றப் பிணையில் உள்ளன.
- ✓ மேலும், சுங்கக் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.12 கோடியினை அரசு போக்குவரத்துக் கழகங்கள் செலுத்துகின்றன.
- ✓ மேற்கூறிய காரணங்களினால், நாள் ஒன்றுக்கு போக்குவரத்துக் கழகத்தின் நட்டத் தொகை 9 கோடி ரூபாயாக உயர்ந்தது.
- ✓ இதனால் போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதி நெருக்கடிக்கு ஆளாகின.

இந்நிலையில் தான், பேருந்து கட்டணங்களை மாற்றியமைக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டது.

கடந்த 2000–ஆம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை கர்நாடகா 16 முறையும், ஆந்திரபிரதேசம் மற்றும் கேரளா தலா 8 முறையும் பேருந்து கட்டணத்தை மாற்றியமைத்துள்ளன. ஆந்திர பிரதேசத்தில் 24.10.2015 அன்று மாற்றியமைக்கப்பட்ட பேருந்து கட்டணமானது கி.மீ. ஒன்றுக்கு 63.70 பைசா ஆகும். கேரளா மாநிலத்தில் 20.5.2014 அன்று மாற்றியமைக்கப்பட்ட பேருந்து கட்டணமானது கி.மீ. ஒன்றுக்கு 64 பைசா ஆகும், கர்நாடகா மாநிலத்தில் 10.1.2015 அன்று மாற்றியமைக்கப்பட்ட பேருந்து கட்டணமானது கி.மீ. ஒன்றுக்கு 59 பைசா ஆகும். மேற்குறிப்பிட்ட பேருந்துக் கட்டணமானது ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே மாற்றியமைக்கப்பட்டன. அவை தற்போது மாற்றியமைக்கப்பட்ட

தமிழ்நாட்டின் பேருந்துக் கட்டணத்தைவிட பல்வேறு நிலைகளில் அதிகமாகவே உள்ளன.

மேலும், இதர மாநில பேருந்து சேவையை ஒப்பிட்டால், ஆந்திரப் பிரதேசத்தில் 11,692, கர்நாடகாவில் 8,125 மற்றும் கேரளாவில் 6,400 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் 21,928 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குறைவான பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கும் கர்நாடகா 16 முறையும், ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளா மாநிலங்கள் தலா 8 முறையும் கட்டணங்களை மாற்றி அமைத்துள்ளன. ஆனால் கடந்த 7 ஆண்டுகளுக்குப் பிறகு தான் பேருந்துக் கட்டணத்தை தமிழ்நாடு அரசு மாற்றியமைத்திருக்கிறது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு போக்குவரத்துக் கழகங்களை கடும் நெருக்கடியிலிருந்து மீளச் செய்து பொது மக்களுக்கு சிறப்பான சேவைகளை தொடர்ந்து வழங்குவதற்கும், போக்குவரத்துக் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் அவர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய சட்டரீதியான பணப்பயன்களை உரிய காலத்தில் வழங்குவதற்கும், விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும், போக்குவரத்து கழகத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சட்ட ரீதியான பணப்பயன்களை வழங்குவதற்கும், மாதந்தோறும் 12 கோடி ரூபாய் சுங்கக் கட்டணம் கட்டுவதற்கும் மட்டுமே கடந்த 20.1.2018 அன்று பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் கல்வியினை கருத்தில் கொண்டு 12ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் (அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள்), கட்டணமில்லா பயணச் சலுகையும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டணமில்லா பயணச் சலுகையும் வழங்கப்பட்டு வந்த நிலையில், 2013–14–ஆம் ஆண்டு முதல் சமுதாயக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் தனியார் தொழில்பயிற்சிக் கூடங்கள்,

இசைக் கல்லூரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சிக் கூடங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணாக்கர்களுக்கும் மேற்படி கட்டணமில்லா பயணச் சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகள், தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள், தனியார் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு 50 சதவிகித பயணக் கட்டணச் சலுகை பழைய கட்டணத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மாணாக்கர்களுக்கான பயண அட்டைகளை வழங்குவதற்கு ஆகும் செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டில் ரூ.540.99 கோடியினை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. பேருந்துக் கட்டணம் மாற்றியமைத்த பின்பும் மாணவர்கள் சிரமமின்றி பயணம் செய்யும் பொருட்டு மேற்படி பயணச் சலுகை அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதே போன்று, முதியோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்து அட்டைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல், ரூபாய் 1,000/-க்கான மாதாந்திர பேருந்து பயண அட்டை தொடர்ந்து வழங்கப்படும்.

இந்நிலையில், பெரும்பான்மையான பொதுமக்களின் வேண்டுகோளினை கருத்தில் கொண்டும், பொது மக்களுக்கு சிறப்பான சேவையை தொடர வேண்டிய போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு அரசு நன்கு பரிசீலித்து பேருந்துக் கட்டணங்களை குறைத்து கீழ்க்கண்டவாறு மாறுதல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட புறநகர் கட்டணம் (Mofussil)

**தற்போது சாதாரண பேருந்துகளில் கட்டணம் கிலோ மீட்டருக்கு 60 பைசாவில் இருந்து 58 பைசாவாக குறைக்கப்படுகிறது. விரைவுப் பேருந்துகளில் கட்டணம் 80 பைசாவிலிருந்து 75 பைசாவாகவும், சொகுசு பேருந்துகளில் 90 பைசாவிலிருந்து 85 பைசாவாகவும், அதிநவீன சொகுசு பேருந்துகளில் (Ultra**

**Deluxe) 110 பைசாவிலிருந்து 100 பைசாவாகவும், குளிர்சாதன பேருந்துகளில் 140 பைசாவிலிருந்து 130 பைசாவாகவும் குறைக்கப்படுகின்றது.**

| கி.மீ. ஒன்றுக்கு பைசாவில் | | |
|---|---|---|
| புறநகர் | 20.1.2018 அன்று மாற்றியமைக்கப்பட்ட பேருந்துக் கட்டணம் | 29.1.2018 முதல் மாற்றியமைக்கப்பட உள்ள கட்டணம் |
| சாதாரண (10 கி.மீ) | 60 | **58** |
| விரைவு (30 Km) | 80 | **75** |
| அதி சொகுசு இடைநில்லாப் பேருந்துகள் புறவழிச்சாலை இயக்கப் பேருந்துகள் (1–1) – (30 கி.மீ) | 90 | **85** |
| அதிநவீன சொகுசு (30 கி.மீ) | 110 | **100** |
| குளிர்சாதனம் (30 கி.மீ) | 140 | **130** |

<u>மாற்றியமைக்கப்பட்ட நகர் மற்றும் மாநகர் பேருந்துக் கட்டணம்</u>

**<u>(Town / City/Chennai)</u>**

**சென்னை மாநகரப் பேருந்துகளில் குறைந்தபட்ச கட்டணம் ரூ.5லிருந்து ரூ.4ஆக குறைக்கப்படுகிறது. மேலும், அனைத்து நிலைகளிலும் ரூ.1 குறைக்கப்படுகிறது. அதேபோன்று மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள நகர்ப்புற பேருந்துகளில் குறைந்தபட்ச கட்டணம் ரூ.5–லிருந்து ரூ.4ஆக குறைக்கப்படுகிறது. மேலும் அனைத்து நிலைகளிலும் ரூ.1 குறைக்கப்படுகிறது.**

*(ரூபாயில்)*

| வ. எண் | இயக்க வகை | 20.1.2018 அன்று மாற்றியமைக்கப்பட்ட பேருந்துக் கட்டணம் | | 29.1.2018 முதல் மாற்றியமைக்கப்பட உள்ள கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1. | மாநகர / நகர இயக்கம் (மாவட்டங்களில்) (1 முதல் 20 நிலை வரை) (Stage) | 5 | 19 | 4 | 18 |
| 2. | மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை. (1 முதல் 28 நிலை வரை) (Stage) MTC | 5 | 23 | 4 | 22 |

ஏற்கனவே **20.1.2018**ல் மாற்றியமைக்கப்பட்ட பேருந்துக் கட்டணத்தினால், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நாள் ஒன்றுக்கு **2** கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என உத்தேசிக்கப்பட்டிருந்தது. தற்போது பேருந்துக் கட்டண குறைப்பால் நாளொன்றுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சராசரியாக **4** கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, போக்குவரத்துக் கழகங்கள் பொது மக்களுக்கு சிறப்பான சேவையை தொடர்ந்து வழங்கிட மாற்றியமைக்கப்பட்ட இப்புதிய பேருந்துக் கட்டண விகிதங்களை ஏற்று, தொடர்ந்து தமிழ்நாடு அரசுக்கு ஆதரவு நல்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாற்றியமைக்கப்பட்ட இப்புதிய கட்டணங்கள் **29.1.2018** அன்று முதல் அமல்படுத்தப்படும்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**